Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 12 (24-02-1992) திங்கட்கிழமை ஓசை: 06

## பிறப்புஅத்தாட்சிப்பத்திரம் விண்ணப்பங்கள் தேக்கம்

பிறப்பு அத்தாட்சிப் படிவங்களை வழங்கக்கோரும் விண்ணப்பங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் பிறப்பு-இறப்புக் காரியாலயத்தில் தேங்கிக் கிடக்கின்றன. சுமார் 6 813 குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப்படிவங்களுக்கான விண்ணப்பங்கள் 1990 ஜூன்மாதம் முதல் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது பிறப்பு அத்தாடசிப் படிவங்களை வழங்குவதற்கான புத்தகங்கள் கொழும்பில் இருந்து கிடைக்காத காரணத்தால், 1990 ஜூன் முதல் பிறப்பு அத்தாட்சிப் படிவங்களை வழங்குவதற்கான வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதால் இந்தத் தேக்கம் ஏற்பட்டுள்ளது.

# படையெடுப்பிற்கு இராணுவம் தயார்

# வன்னி மாவட்டங்களில் ஊரடங்கு

## எல்லை நோக்கி துருப்புகள் நகர்வு

(வவுனியா)

வவுனியாவில் பெரிய அளவில் படையெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு சிறிலங்கா இராணுவம் தயார் நிலையில் உள்ளது. இந்த இராணுவ நடவடிக்கைக்காக பெருந்தொகையான துருப்புகளும், கவச பீரங்கிப் படையணிகளும் வவுனியா எல்லையோரமாகக் குவிக்கப்பட்டுள்ளன.

இன்று அதிகாலை ஒரு மணியிலிருந்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தை சிறிலங்கா அரசு பிரகடனம் செய்துள்ளது. எந்தநேரத்திலும் படையெடுப்பு நடைபெறலாமென வவுனியாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் பெரும் படையெடுப்பு ஒன்றை நடத்துவதற்குச் சிறிலங்கா இராணுவம் கடந்த ஒருமாத காலததிற்குமேலாக ஆயத்தங்கள்செய்துவருவது தெரிந்ததே ஆயிரக்கணக்கான துருப்புக்களும், கவசபீரங்கி அணிகளும் அனுராதபுரத்திலிருந்து வவுனியா வடக்கு எல்லைப் பிரதேசத்திற்கு நகர்த்தப்பட்டு வந்தன.

தற்பொழுது இராணுவம் நிலைகொண்டிருக்கும் தாண்டிக்குளம் பகுதியிலிருந்து பிரதான பாதையூடாக வடக்கே நோக்கி இராணுவத்தினர் நகரலாமென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### ஹேமா பிரேமதாஸா ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நாளை நடைபெற இருக்கும் சர்வதேச "முதல் பெண்மணிகள்" மாநாட்டில் கலந்துகொள்ள திருமதி ஹேமாபிரேமதாஸா நேற்று ஜெனிவா புறப்பட்டுள்ளார்.

முதல் தடவையாக நடைபெறும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய பிரதேசங்களின் தலைவர்களின் மனைவிமார் கலந்துகொள்ளவுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

மாகாண எல்லைகளை

### மீளமைத்தல் வேண்டும் அமை. அபுசாலி விருப்பம்

(கொழும்பு)

நான்கு மாகாணங்களின் எல்லைகள் மீள நிர்ணயிக்கப்பட வேண்டும். அதுவே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு என நான் கருதுகிறேன் இவ்வாறு தோட்ட சோலைகள் அமைச்சர் எம். எல்.எம்.அபுசாலிபாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணம், மேல்மாகாணம், வடகிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகியவற்றின் எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

அம்பாறை, மட்டக்களப்பு ஒரு மாகாணமாக அமையலாம். பொலநறுவையும் திருக்கோணமலையும் இன்னுமொரு மாகாணமாக அமையலாம். மன்னார் வடமேல் மாகாணத்துடன் சேர்க்கப்படலாம். அனுராதபுரம் வெலிஓயாவுடன் சேர்ந்து இன்னுமொரு மாகாணமாகமுடியும் என்று கூறினார்.

விடுதலைப்புலிகள்

### வயது முதிர்ந்தோர் படையணி பயிற்சி முடிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்ட நாற்பத்து இரண்டு பேரைக் கொண்ட படையணியொன்று விடுதலைப்புலிகளின் இராணுவப்பயிற்சியை வெற்றிகரமாக நேற்றுமுன்தினம் நிறைவு செய்துள்ளது. இப்பயிற்சி பெற்ற அணியில் எழுபத்து மூன்று வயதுடைய ஒருவரும், அவரோடு சேர்த்து அறுபது வயதுக்கு மேற்பட்ட மூவரும் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் முழுநேர உறுப்பினர்களாக இணைந்து கொண்டு செயற்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்ளையில் ஈடுபட்ட

### இராணுவத்தில் ஒருவர்கைது

வெள்ளவத்தையிலும் வேறு பல இடங்களிலும் இடம் பெற்ற கொள்ளைகள் தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தைச்சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வேறொரு சிப்பாயும் கடற்படையைச் சேர்ந்த ஒருவரும் தேடப்பட்டு வருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட இராணுவவீரர் அறிவித்தல் எதுவுமின்றி கடமைக்குச் செல்லாது இருப்பவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவரிடமிருந்து தங்கநகைகள் உட்பட வேறுபல பெறுமதிவாய்ந்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் பயன்படுத்திவந்த

### தெரிவுக்குழுவின் சிபாரிசு மார்ச்மாத இறுதிக்குள்

(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வுக் கானபாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபாரிசுகள் அடுத்த மாத இறுதிக்குள் வெளியிடப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை அடுத்தமாத இறுதிக்குள் சமர்ப்பிக்கும் எனஎதிர்பார்க்கப் படுகின்றது. மேலும் இத் தெரிவுக்குழுவிற்கு முன்யோசனைகளைத் தெரிவிக்க புலிகள் விரும்பினால் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொண்டாவுக்கு பயப்படும்

செட்டிகுளம்

### இராணுவ முகாமிலிருந்து தொடர் எறிகணை வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த இரு வாரங்களாக எறிகணைத் தாக்குதலும், துப்

...யிருப்பு பகுதிகளை மையமிட்டு இத்தாக்குதல்களை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வருகின்றது.

பனாகொட

### இராணுவ முகாம் அருகே

### வட-கிழ. யுத்தத்தை முடிக்க ஐ. நா. தலையீடு வேண்டும்

பத்து ஆண்டுகளாக நடைபெறும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைத் தலையிடுமாறு விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கோரியுள்ளார் என்ற சண்டே ஐலண்ட் பத்திரிகைச் செய்தியை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. அறிவித்தது. அத்துடன் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்குமாறும் வே. பிரபாகரன் ஐ நா. ஸ்தாபனத்தைக் கேட்டிருந்ததாகவும் சண்டே ஐலன்ட் செய்திவெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

அவர் மேலும் தெரிவிக் கையில், வடக்கு மாகாணம், மேல்மாகாணம், வடகிழக்கு மாகாணம், வடமத்திய ஓயாவுடன் சேர்ந்து இன்னு மொரு மாகாணமாகமுடியும் என்று கூறினார்.

## தெரிவுக்குழுவின் சிபாரிசு மார்ச்மாத இறுதிக்குள்

(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வுக் கானபாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபாரிசுகள் அடுத்த மாத இறுதிக்குள் வெளியிடப் படலாம் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசி யல் தீர்வு கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன் றத் தெரிவுக்குழு தனது அறிக் கையை அடுத்தமாத இறுதி க்குள் சமர்ப்பிக்கும் எனஎதிர் பார்க்கப் படுகின்றது. மேலும் இத் தெரிவுக்குழுவிற்கு முன் யோசனைகளைத் தெரிவிக்க புலிகள் விரும்பினால் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டாவுக்கு பயப்படும் ஐ.தே. கட்சி அரசாங்கம்

### சு.கட்சி எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

1977 ஆம் ஆண்டு முதல் மலையகப பகுதியிலுள்ள சிங் களவர்களுக்கு ஒரு அங்குலக் காணித்துண்டும் வழங்க வில்லை. தொண்டமானுக்குப் பயந்தே இவ்வாறு அரசாங் கம் இருந்து வருகிறது, இன்று அங்குள்ள சிங்கள மக்கள் மலசலகூடங்களைக்கூட கட் டிக் கொள்ள முடியாத நிலை யில்இருக்கின்றனர்என சுதந்தி ரக்கட்சி எம்.பி ஜெயரட்ணா பாராளுமன்றத்தில் தெரிவித் தார்.

நாம் தமிழர்களுக்கோஏனை யோருக்கோ எதிரானவர்கள் அல்லர். உண்மையை எடுத் துக் கூறுகின்றோம். எமது பகுதியிலுள்ளதோட்டங்களை எல்லாம் மாராஜா கம்பெ னிக்குக் கொடுத்துள்ளீர்கள். அவர்களுக்கு தோட்டத்துறை குறித்து என்ன தெரியும்?

முழுநாட்டிலும் எமது ஆட் சிக் காலத்தின் போது உண வுக்குத் தட்டுப்பாடு நிலவி யது எனினும் நாம் தோட் டத்தொழிலாளரைப் பட்டினி போடவில்லை. அவர்களுக் காக நாம் அன்று சத்து நிறை ந்த ஆட்டாமாவு விநியோகித் தோம் எனவும் அவர் கூறி னார்.

## மன்சூரின் பேச்சிற்கு அஷ்ரப் கண்டனம்

(கொழும்பு)

விடுதலைப புலிகளோடு சமப்படுத்தி முஸ்லிம் காங்கி ரஸ் குறித்து அமைச்சர் மன் சூர் அம்பாறைக் கச்சேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன் றில் பேசியமையைக் கண் டித்து அவசர கால சட்ட நீடிப்பு விவாதத்தில் அரசுக்கு ஆதரவு தரப் போவதில்லை என்று முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம் அஷ் ரப் தெரிவித்தார். அவசர கால சட்ட நீடிப்பு தொடர் பான விவாதத்தில் கலந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா மாவட்டத்தில் பெரும் படையெடுப்பு ஒன்றை நடத்துவதற்குச் சிறிலங்கா இராணுவம் கடந்த ஒருமாத காலத்திற்குமேலாக ஆயத்தங் கள்செய்துவருவது தெரிந்ததே ஆயிரக்கணக்கான துருப்புக்க ளும், கவசபீரங்கி அணிகளும் அனுராதபுரத்திலிருந்து வவு னியா வடக்கு எல்லைப் பிர தேசத்திற்கு நகர்த்தப்பட்டு வந்தன.

தற்பொழுது இராணுவம் நிலைகொண்டிருக்கும் தாண் டிக்குளம் பகுதியிலிருந்து பிர தான பாதையூடாக வடக்கே நோக்கி இராணுவத்தினர் நக ரலாமென நம்பகமான வட் டாரங்களிலிருந்து தெரியவரு கிறது.

### செட்டிகுளம்

## இராணுவ முகாமிலிருந்து தொடர் எறிகணை வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தி லுள்ள செட்டிகுளம் பகுதி யில் நிலைகொண்டுள்ள சிறி லங்கா இராணுவத்தினர் கட ந்த இரு வாரங்களாக எறி கணைத் தாக்குதலும், துப் பாக்கிப் பிரயோகமும் மேற் கொண்டு வருவதாக அங்கி ருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதனால் அயற் கிராமங் களில் பதற்றம் நிலவுவதோடு பலத்த சேதங்களும் ஏற்பட் டுள்ளன. பொதுமக்களின் குடி யிருப்பு பகுதிகளை மையமிட்டு இத்தாக்குதல்களை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வருகின்றது.

### பனாகொட

## இராணுவ முகாம் அருகே மூன்று தமிழிளைஞர் கைது

பனாகொட இராணுவ முகாமின் புலனாய்வுப் பிரிவி னர் அண்மையில் முகாமிற்கு சமீபமாக மூன்று தமிழ் இளை ஞர்களைக் கைது செய்துள்ள னர். இவர்களது நடத்தையில் சந்தேகம் கொண்ட இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழ. யுத்தத்தை முடிக்க ஐ. நா. தலையீடு வேண்டும்

பத்து ஆண்டுகளாக நடை பெறும் யுத்தத்தை ஒரு முடி வுக்குக் கொண்டுவரும் வகை யில் ஐக்கிய நாடுகள் ஸ்தாப னத்தைத் தலையிடுமாறு விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கோரியுள்ளார் என்ற சண்டே ஐலண்ட் பத்திரிகைச் செய் தியை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. அறிவித்தது. அத்து டன் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் மத்தி யஸ்தம் வகிக்குமாறும் வே. பிரபாகரன் ஐ நா. ஸ்தாபன த்தைக் கேட்டிருந்ததாகவும் சண்டே ஐலண்ட் செய்திவெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் ஒருவர் கைது

வெள்ளவத்தையிலும் வேறு பல இடங்களிலும் இடம் பெற்ற கொள்ளைகள் தொடர்பாக சிறிலங்கா இரா ணுவத்தைச்சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வேறொரு சிப்பாயும் கடற் படையைச் சேர்ந்த ஒருவரும் தேடப்பட்டு வருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட இரா ணுவவீரர் அறிவித்தல் எதுவு மின்றி கடமைக்குச் செல் லாது இருப்பவர் என தெரி விக்கப்படுகிறது.

இவரிடமிருந்து தங்கநகை கள் உட்பட வேறுபல பெறு மதிவாய்ந்த பொருட்கள் மீட் கப்பட்டுள்ளன.

இவர்கள் பயன்படுத்திவந்த டொயோட்டோ கார் ஒன் றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

### மன்னாரிலிருந்து

## இடம்பெயர்ந்தோர் மீண்டும் திரும்புவதற்கு மறுப்பு

மன்னார் தீவிலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் சென்ற நாலாயிரம் குடும்பங்களில் சுமார் நூற்று ஐம்பது குடும் பங்களே இதுவரை மீண்டும் மன்னார் திரும்பியிருக்கின் றன. மன்னாரில் பாடசாலை கள் எதுவும் இயங்கவில்லை. எனவே புத்தளம் பகுதியில் தங்கியிருக்கும் முஸ்லிம் மாண வர்கள் மன்னார் திரும்பும் சூழல் ஏற்படும் வரையில் அகதிகளாயுள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடர வசதி செய்யப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட எம். பி. ஒருவர் பாராளுமன்றத் தில் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

## உணவுமுத்திரையில் வெட்டு; இன்று கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

அரச மானியமாக வழங்கப் படும் உணவு முத்திரைகளில் எட்டு மாதத்திற்குரிய புள் ளிகள் வெட்டியெடுக்கப்பட்டு அம் முத்திரைக்குரிய உணவுப் பொருள்கள் வழங்கப்படாமை யைக் கண்டித்து கண்டனம் தெரிவிக்கும் ஊர்வலமொன்று இன்று காலை நடைபெறவுள் ளது.

இக்கண்டன ஊர்வலம் காலை ஒன்பது மணியளவில் கொக்குவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகி பிரதான வீதிவழி யாக் தட்டாதெருச் சந்தி நல்லூர்கோயில் வீதி வழியாக யாழ். கச்சேரியைச் சென்ற டையும்.

ஊர்வலத்தின் இறுதியில் பொதுமக்களின் கோரிக்கை களை விளக்கும் மூகமாக மகஜர் ஒன்று யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட வுள்ளது

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கமும், சுன் னாகம் வர்த்தகர் சங்கமும் இணைந்து இந்தஊர்வலத்தை ஒழுங்குசெய்துள்ளன.

### தேசிய வீடமைப்பு அதிகாரசபை

## மாகாண காரியாலயம் வவுனியாவிற்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதி கார சபையின் வடகிழக்கு மாகாணக் காரியாலயம்இரண் டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் யாழ்ப் பாணத்தில் இயங்கி வந்த இக் காரியாலயம் தற்போது புதி தாக நியமனம் பெற்ற மாவ ட்ட முகாமையாளரின்முயற்சி யாலேயே வவுனியாவிற்கு மாற்றப்பட்டுள்ளது. யாழ்ப் பாணம் இராணுவக் கட்டுப் பாட்டில் இல்லாத காரணத் தால் அதனை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வவு னியா பிரதேசத்திற்கு மாற்று மாறு இவர் விடுத்த வேண்டு கோளுக்கிணங்கவே தற்போது இக்காரியாலயம் அங்கு மாற் றப்பட்டுள்ளது.

இதேவேளை வரும் மே மாதம் ஜனாதிபதி பிரேம தாசாவினால் திறந்து வைக் கப்படவிருக்கும் புதிய வீடு அமைக்கும் திட்டத்திற்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் இங்கிருந்து இரு தொழில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டோர் மனித உரிமை மீறப்பட்டது

### நீதிபதி சரத் சில்வா அறிவிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள் ளோரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பது பார்த்த மாத்திரத்தி லேயே புலனாகின்றது என்று நீதிபதி சரத் சில்வா தெரிவித் தார்.

மலையக மக்கள் முன்ன ணித் தலைவர் பெ. சந்திர சேகரன், உப தலைவர் வி. டி. தர்மலிங்கம், பொதுச் செய லாளர் பரீவா அப்துல் காதர் ஆகியோர் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை தொடர்பாக அம் மூவரது மனைவியரும் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்த நீதிபதி சரத் சில்வா கூறுகையில் அரசியலமைப்பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 40,000 பேர் வசித்த இடத்தில் 600 பேர் கூட இல்லையே

### அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா கவலை

[வவுனியா]

நாற்பதாயிரத்துக்கும் அதிக மான மக்கள் வாழ்ந்த தீவுப் பகுதிகளில்தற்போது அறுநூறு பேர் கூட இல்லையே என்று வவுனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசிய அமை ச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரி வித்தார்.

உள்நாட்டலுவல்கள்-பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேலும் பேசுகையில், தீவுப் பகுதிக்கு அரசாங்கஊழியர்ஒரு வர் உதவி அரசாங்க அதிப ராக நியமிக்கப்பட்டிருப்பதாக வும், ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கிக் கிளை ஒன்று திறக்கப்பட்டு தேவையான பணமும் அனுப்பிவைக்கப்பட் டுள்ளது எனவும், அரச ஊழி யர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது எனவும் தெரிவித்தார்.

## தமிழர்களை ஒதுக்கிட திருமலையில் புதிய திட்டம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் புதி தாக ஏற்படுத்தப்படும் குடி யேற்றங்களில் தமிழர்களை குடியமர்த்துவது போல் காட் டிக் கொண்டு அவர்களை சிறு பான்மையினராக்கி பாது காப்பற்றவர்களுக்கும் திட்ட மொன்றை செயற்படுத்த சிறி லங்கா அரச அதிகாரிகளும் இராணுவத்தினரும் முயன்று வருகின்றனர்.

தமிழரின் பாரம்பரிய இடங் களிலிருந்துஅவர்களை விரட்டி யடித்து அந்த இடங்களில் சிங் களவர், முஸ்லிம்களை பெரும் பான்மையாகவும் தமிழர்களை சிறுபான்மையாகவும் குடியேற் றுவதன் மூலம் இத்தகைய நிலையைஏற்படுத்தும்நடவடிக் கைகளில் அரச அதிகாரி கள் ஈடுபட்டுள்ளனர்.

திருக்கோணமலையில் இரா ணுவக்கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் வாழும் தமிழ் மக் கள் இராணுவத்தால்ஏற்படுத் தப்பட்ட முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர் கள் முகாம்களை விட்டு வெளி யேறவோ தமது சொந்த இடங்களை சென்று பார்க் கவோ அனுமதிக்கப்படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# "எமது மக்கள் துன்பப்படுவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது"

## — முத்து சிவலிங்கம்

(கொழும்பு)

''மலையகம் அமைதியாகவே இருக்கிறது. அங்கே புலியும் பதுங்க முடியாது. சிங்கமும் பாய முடியாது. எமது மக்களை தொடர்ந்தும அமைதியாக வாழ விடுங்கள்'' என நுவரெலியா மாவட்ட எம்.பி முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழனன்று நடந்த அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே முத்து சிவலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

பதுளை பகுதியில் ஐம்பது தோட்டத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்இவர்கள் தொடர்பாகஎது வித விசாரணையும் இதுவரை நடத்தப்படவில்லை.

இவர்கள் எல்லோரும் குடும்பத் தலைவர்கள். வீட்டில் பெண்களும் குழந்தைகளும் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி அப்பாவிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். எமது மக்கள் துன்புறுத்தப்படுவதை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எமது மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை எடுத்துச் சொன்னால் தொண்டமானும் இ.தொ.காவும் இனத்துவேசம் பேசுகின்றார்கள் எனக் கூறப்படுகிறது.

நானுஓயாவில் ஜனவரி 29ஆம் திகதி இராஜேந்திரன் என்ற வாலிபர் வாகனம் ஒன்றில் வந்தவர்களினால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார். இதைப் போலவே பெப்ரவரி முதலாம் திகதி இராகலையைச் சேர்ந்த வேலு சண்முகம் என்பவர் இதே வாகனத்தில் கடத்தப்பட்டிருக்கிறார்.

இவர்கள் தொடர்பாக பொலிஸிலும் இராணுவத்தினரிடமும் விசாரித்தால் எதையும் அறிய முடியவில்லை, இத்தகைய நிலைமைகளை தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தோட்டப் பகுதிகளில் மயானத்துக்குக் கூட நிலத்தை வாங்க முடியவில்லை என இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். இந்துக்கள் ஒரு போதுமே மயானம் தங்களின் குடியிருப்புக்களுக்கு மத்தியில் இருப்பதை விரும்புவதில்லை. மயானத்திற்கு நிலத்தைக்கேட்பவர்கள்குடியிருப்பு பகுதிகளுக்குள்நிலத்தை வாங்க முனைவதையே தோட்டப் பகுதிகளில் உள்ள மக்கள் எதிர்க்கிறார்கள். குடியிருப்பு பகுதிகளுக்கு மத்தியில் மயானத்திற்கு நிலத்தைக் கேட்டுபிரச்சினையைக்கிளப்பிவிட்டு பின்னர் எம்மைக் குறை கூறுகிறார்கள் இது சரியானதல்ல.

உடறதல பகுதியில் காட்டுக்குள் மரத்தை வெட்டுவதற்காக சென்ற இருபத்திமூன்று பேர் வன அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டபோது ஐந்நூறு தோட்டப்பகுதி மக்கள் வந்து அதிகாரிகளை தாக்கிவிட்டு அவர்களை மீட்டுக் கொண்டு சென்றதாக இன்று இங்கே கண்டி எம்.பி. ஜெயரத்னா கூறினார்.

உண்மை அதுவல்ல. காட்டுக்குள் விறகு எடுக்கச்சென்ற இருவர் அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டனர். இனந்தெரியாதவர்களினால் அவர்கள் கடத்தப்படுவதாக நினைத்தே மக்கள் அதிகாரிகளை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர் என்று முத்து சிவலிங்கம் தனதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

## தோல்வியில் முடியும்

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் யூனியனில் ஜனநாயகம் தோல்வியில் முடியும் சாத்தியம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே கொர்பசேவ் இதனைத் தெரிவித்துள்ளார்.

## சின்னம் சூட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை சாரணர் குழு; புதிய சாரணர்களுக்கான சின்னம் சூட்டு விழாவை இன்று திங்கட்கிழமை நடாத்தவுள்ளது;

அத்துடன் ஸ்தாபகர் பேடன்பவல் அவர்களின் பிறந்ததினமும் கொண்டாடப்படும்.இவ் விழா குழுச்சாரணர் தலைவர் வே.பூ.நிரஞ்சன் குமார் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## யாழ். மாவட்டத்திற்கு 32 ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனைய மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு 32 ஆசிரியர்கள் 01-03-1992 இல் இருந்து செயற்படும் படியாக மாற்றப்பட்டுள்ளார்கள். இந்த மாற்றங்கள் வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்று ஆசிரியர்கள் வவுனியா மாவட்டத்திற்கும் திருக்கோணமலைமற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆசிரியர்களும் மாற்றப்பட்டுள்ளார்கள்.

மேற்படி மாற்றப் பட்டியலின் பிரதி தமிழர் ஆசிரியர் சங்க நல்லூர்ப் பணிமனையில் இன்று பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

இவ் ஆசிரியர்களின் பெயர் விபரமும் விடுப்புக்குரிய பாடசாலையும் பின் வருமாறு.

திருமதி இந்திராணி இரட்ணசோதி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, திரு. வி. அருளானந்தம் - ஆனைப்பந்தி அ. மி. த. க. பாடசாலை, திருமதி சகுந்தலாதேவி கயிலாசநாதன் - இணுவில் சைவமகாஜன, திரு. இராசரத்தினம் தயாபரன்- சேர் வைத்தியலிங்கம் துரைசாமி ம. ம. வி., திருமதி கௌரி சேதுராஜா- வடமராட்சி, திருமதி அம்சத்வனி மோகனராஜ சிங்கம்- சாவகச்சேரி பாடசாலை திரு. ஈஸ்வரநாதன் - உரும்பராய் இந்துக்கல்லூரி, திருமதி இ. சிவலிங்கம் - கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, செல்வி கமலாம்பிகை கணபதிப்பிள்ளை- கலட்டி றோ. க. த. பா., திருமதி க. சிறி முருகதாஸ்- மத்துவில் பாரதி வித்தி.,

திருமதி ஜெகதாம்பிகை சிறிராமநாதன் உசன். ராமநாதன் வித்தி, திரு. க. சேய்சோதிகாந்தன், திரு. எஸ். மனோகரன், திரு வி நடராசா, திருமதி இராசலிங்கம்- நயினாதீவு ம. வி., திருமதி தேவராசா - விக்ரோறியாக் கல்லூரி, செல்வி திருமகள் வினாசித்தம்பி, திருமதி தேவகாந்தி ஞான சூரியன் திரு. பிரணகார்த்திகர் சர்மா மயிலணி சைவ வித்தி, செல்வி கலாவதி குமாரசாமி திரு. எஸ். மகேஸ்வரன் சோமஸ்கந்தா, செல்வி கேதீஸ்வரி தம்பு வல்லை மகளிர்.செல்வி ரேணுகாதேவி அருணாசலம் திருமதி கமலாதேவி நடராஜா, பண்டத்தரிப்பு மகளிர், செல்வி தயானந்தராசா, திருமதி அருணகிரிவாசன், செல்வி கதிரேசு பத்மாவதி, திருமதி ஞானசுப்பிரமணியம், திருமதி செல்வராசா - நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி, செல்வி நளினா விஸ்வலிங்கம் பொலிகண்டி இ. த. க. பா., செல்வி பத்மலோசினி கந்தப்பு வட இந்து மகளிர் கல்லூரி.

# கைது செய்யப்படுபவர்கள் மீது விசாரணை நடத்துவதில்லை

## - செல்லச்சாமி

(கொழும்பு)

பயங்கர வாதத்தைக் காரணம் காட்டிஇன்று அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள கைதுசெய்யப்படுகின்றார்கள். கைது செய்யப் படுபவர்கள் மீது விசாரணை நடத்தப் படுவதில்லை. அவர்கள் நீண்ட காலம் தடுத்துவைக்கப்படுகின்றார்கள்.என்று கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக் கிழமை பாராளுமன்றத்தில் செல்லச்சாமி தொடர்ந்து பேசிய போது, நாங்கள் கேட்பதெல்லாம் குற்றமிழைத்தவர்கள் மீது சட்டநடவடிக்கைஎடுத்து ஏனையவர்களை விடுதலை செய்யுங்கள் என்பதைத்தான்.

தோட்டத் தொழிலாளர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தமிருக்கிறது என்ற குற்றச்சாட்டின் பேரில் பல அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களும் குற்றமற்றஇளைஞர்களும் கைது செய்யப் படுகின்றமையும் அவர்கள் நீண்ட காலம்தடுத்துவைக்கப்படுகின்றமையும் இன்று சாதாரண நிகழ்ச்சி.

வடக்கிலிருந்து புலிகள் இங்கே ஊடுருவியுள்ளனர் என்று இவர்கள்குற்றம்சுமத்துகின்றனர். நாட்டில்எப்பகுதிக்கும் போகலாம், வரலாம் என்று இருக்கும்போது எவ்வாறு இவர்கள் புலிகளை அடையாளம்காணுகிறார்கள்?

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களை புலிகள் என சந்தேகித்து பொலிசார் கைது செய்கின்றார்கள். அப்படி அடையாள அட்டை இல்லாதவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாயின் நாட்டின் அரைவாசிப் பேருக்கு அடையாள அட்டை இல்லை. அவர்கள் அனைவரையும் சந்தேகிக்க முடியுமா?

இன்று வடக்கில் பிரச்சினை இருப்பதால் அது சகலரையும் பாதிக்கின்றது. நாட்டை அபிவிருத்தி செய்ய முடியவில்லை வெளிநாட்டினரிடம் கடன் வாங்க வேண்டியுள்ளது. அதனால்தான் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கான தீர்விலேயே இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்குமான தீர்வுகள் தங்கியுள்ளன என்றும் செல்லச்சாமி தமதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## பிலிப்பைன்சிலுள்ள கடற்படைத் தளத்தை அகற்றும் பணி ஆரம்பம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ்நாட்டில்அமெரிக்க கடற்படையின் கடைசித் தளத்தை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கப்பல்கள்செப்பனிடப்படும் மிதக்கும் உலர்த்துறை ஒன்றை மாலுமிகள் இழுத்துச் சென்றதாகக் கூறப் படுகிறது இந்தக்கலம்சூபிஸ்தளத்திலிருந்து அமெரிக்காவை நோக்கித்தனது பயணத்தைத் தொடங்கியது.

சூபிஸ் தளம் இந்த ஆண்டு இறுதிக்குள் மூடிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளமூன்று உலர்த்துறைகளில் இதுவும் ஒன்றாகும்.

ஒரு நூற்றாண்டு காலம் அமெரிக்கா பயன்படுத்திவந்த சூபிஸ் தளத்தின் குத்தகையை மேற் கொண்டும் பத்து ஆண்டுகளுக்கு நீடிப்பதில்லை என பிலிப்பைன்ஸ் அரசு முடிவெடுத்தது தெரிந்ததே.

## இலங்கையின் அரசியலில் இந்தியாவுக்கு ஆர்வமில்லை

### கூட்டணி எம். பி.

(கொழும்பு)

இலங்கை அரசியல் விவகாரத்தில் இந்தியாவுக்கு அக்கறை இல்லை என்று புதுடில்லி சென்று முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு கொழும்பு திரும்பியுள்ள கூட்டணித் தூதுக் குழுவின் எம்.பி. ஒருவர் கருத்துவெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கையின் அரசியற் பிரச்சினை இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகளின் ஒன்றிணைந்த நடவடிக்கையின் மூலமே தீர்க்கப்படவேண்டும் என்பதே இந்திய அரசியல், ராஜதந்திர மட்டங்களில் நிலவும் அபிப்பிராயமாகும். மீண்டும் ஒரு தடவை இலங்கையின் அரசியற் பிரச்சினையில் தலையிட இந்தியா ஆர்வம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அ.புரவில் பாதுகாப்புதீவிரம் ஹெல உறுமய போதி பூஜை

(அனுராதபுரம்)

ஹெலஉறுமய அமைப்பினர் அனுராதபுரம் புனித நகரில் தெய்வ ஆசி வேண்டிப் போதி பூசையில் ஈடுபட்டிருந்த சமயம் அனுராதபுர நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

புலிகள் அனுராதபுரத்துக்குள் ஊடுருவித் தாக்குதலை மேற்கொள்ளப் போகிறார்கள் என்ற தகவல் பொலிசுக்குக் கிடைத்ததைத் தொடர்ந்தே பாதுகாப்பு நடவடிக்கைஎன்று சொல்லப்படுகிறது.

அனுராதபுர நுழைவாயில் எங்கும் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு வாகனங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பாதசாரிகளும் சோதிக்கப்பட்டார்கள். பக்தர்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயேபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தமிழக சிறைக்கைதிகள் மீது வழக்குத் தாக்கலாகும்

(கொழும்பு)

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தொளாயிரத்து நாற்பத்தெட்டு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்திய நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் ... கடத்தல், மற்றும் ஆயுதங்கள் வைத்திருத்தல் போன்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் தெமோதர உடுவரை மேபியர் ...

இது குறித்து விபரங்களை இ.தொ.கா பதுளை மாநில பிரதிநிதி எஸ். சண்முகம் ...

## தொண்டமானின் யோசனைகளை எதிர்க்க 'ஹெல உறுமய' வேண்டுமா?

## பெருந்தோட்டங்கள் இந்தியக் கம்பனிகளிடம்

### - லக்ஸ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

இந்தியக் கம்பனிகள் இலங்கையின் பெருந்தோட்டங்க ...

இங்கு தோட்ட நிர்வாகங்க ...

பாராளுமன்றத்தில் செல்லச் சாமி தொடர்ந்து பேசிய போது, நாங்கள் கேட்பதெல்லாம் குற்றமிழைத்தவர்கள் மீது சட்டநடவடிக்கைஎடுத்து ஏனையவர்களை விடுதலை செய்யுங்கள் என்பதைத்தான்.

தோட்டத் தொழிலாளர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தமிருக்கிறது என்ற குற்றச்சாட்டின் பேரில் பல அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களும் குற்றமற்றஇளை

இல்லாதவர்களை புலிகள் என சந்தேகித்து பொலிசார் கைது செய்கின்றார்கள். அப்படி அடையாள அட்டை இல்லாதவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாயின் நாட்டின் அரைவாசிப் பேருக்கு அடையாள அட்டை இல்லை. அவர்கள் அனைவரையும் சந்தேகிக்க முடியுமா?

இன்று வடக்கில் பிரச்சினை இருப்பதால் அது சகலரையும் பாதிக்கின்றது. நாட்டை அபி

துக்குமான தீர்வுகள் தங்கியுள்ளன என்றும் செல்லச்சாமி தமதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தொடங்கியது.

சூசிஸ் தளம் இந்த ஆண்டு இறுதிக்குள் மூடிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளமூன்று உலர்த்

## தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் தெமோதர உடுவரை மேபியர் மேல் டிவிசன் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து பத்து நாட்கள் தொழிலாளர்களுக்கு 'அரைப்பேர்' போட்டதை ஆட்சேபித்து வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இது குறித்து விபரங்களை இ.தொ.கா பதுளை மாநில பிரதிநிதி எஸ். சண்முகம் தெரிவித்தார் தீர்க்கப்படாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகோரியும் இவர்கள் இந்த வேலை நிறுததத்தில் இறங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் ஸ்ரீபன்ராஜ்

பிரான்சில் வசிக்கும் அரியாலையைச் சேர்ந்த ஜெயக்குமார் காந்திமதி தம்பதிகளின் புதல்வன் ஸ்ரீபன்ராஜ் தனது முதலாவது பிறந்தநாளை இன்று வெகு சிறப்பாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்தி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பியும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

சி/3953

## தமிழக சிறைக்கைதிகள் மீது வழக்குத் தாக்கலாகும்

(கொழும்பு)

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தொளாயிரத்து நாற்பத்தெட்டு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்திய நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் மேலும் படுகொலைகள், கொலை முயற்சிகள், ஆட்கடத்தல், மற்றும் ஆயுதங்கள் வைத்திருத்தல் போன்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை

(கொழும்பு)

ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கு ஆள் சேர்ப்பதற்கான பரீட்சைப் பெறுபேறுகள் ஆறு மாதமாகியும் இது வரை வெளியிடப்படவில்லை

இப்பரீட்சை 1991 ஆகஸ்ட் 31ல்நடைபெற்றது. கொழும்பு பரீட்சைத் திணைக்களம் இது வரையும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடாதது குறித்து பரீட்சைக்குத் தோற்றியவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

## குண்டுகள் தொடர்பாக பூ வியாபாரி கைது

(கொழும்பு)

கொழும்பில் வெடிக்க வைக்க குண்டுகள் கொண்டு வந்ததாகக் கூறப்படுவது தொடர்பாகக் கொழும்பு கதிரேசன் வீதியைச் சேர்ந்த பூ வியாபாரி நாதன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பனாகொடை இராணுவ முகாமிற்கு அண்மையில் வைத்துக் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் வாலிபர்களில் ஒருவர் கொடுத்த வாக்கு மூலத்தையடுத்தே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார் என்றும்,

கைது செய்யப்பட்ட நாதன் கோவிலுக்கு அண்மையில் உள்ள ஒரு கடையில் பூ விற்பவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அதிபர் தரம் மூன்று, இரண்டு நேர்முகப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி அதிபர் தரம் மூன்றுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு செல்லாதவர்களும், அதிபர் தரம் மூன்று பதவியிலிருந்து அதிபர் தரம் இரண்டுக்கான சேவை மூப்பு அடிப்படையிலான பதவிக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பரீட்சைக்கு செல்லாதவர்கள் தற்போதும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றலாம் என கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அறிவித்துள்ளார் என இக் கட்சியின் பொதுச்செயலாளர் மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழா ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைக்கு ஏற்ப இவர்களுக்கான கால எல்லையை மேலும் நீடிப்பது சிரமமாக இருப்பதால் இவர்களை கூடிய விரைவில்அனுப்பி அதிபர்களுக்கான வெற்றிடங்களை விரைவாக நிரப்ப ஆவன செய்யுமாறும் கல்விச் சேவை ஆணைக்குழு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரைக் கோரியுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## ஹெல உறுமய போதி பூஜை

(அனுராதபுரம்)

ஹெலஉறுமய அமைப்பினர் அனுராதபுரம் புனித நகரில் தெய்வ ஆசி வேண்டிப் போதி பூஜையில் ஈடுபட்டிருந்த சமயம் அனுராதபுர நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

புலிகள் அனுராதபுரத்துக்குள் ஊடுருவித் தாக்குதலை மேற்கொள்ளப் போகிறார்கள் என்ற தகவல் பொலிசுக்குக் கிடைத்ததைத் தொடர்ந்தே பாதுகாப்பு நடவடிக்கைஎன்று சொல்லப்படுகிறது.

அனுராதபுர நுழைவாயில் எங்கும் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு வாகனங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பாதசாரிகளும் சோதிக்கப்பட்டார்கள். பக்தர்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயேபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தொண்டமானின் யோசனைகளை எதிர்க்க 'ஹெல உறுமய' வேண்டுமா?

தொண்டமானின் ஆலோசனைகளில் இருந்து நாட்டைக் காப்பாற்றவெனக் கூறிக் கொள்ளலாம்'ஹெல உறுமய' என்ற இனவாதம் உருவாக்கப் பட்டிருப்பதேன்? தொண்டமான் என்ற தமிழ் பெயருக்காகவா? இனப் பிரச்சினைத் தீர்வுக்குக் கொண்டு வருவதற்கான வழி வகைகளை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு வேறு பல கட்சிகளும் ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருக்கின்ற போது தொண்டமானின் ஆலோசனையை எதிர்த்து 'ஹெல உறுமய' துவேசத்தைக் கக்குவது அவசியமா? என்று இந்து சமய கலாசார அமைச்சர் தேவராஜ் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய தேவராஜ் மேலும் குறிப்பிடுகையில்;

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாத்திரமல்லாமல் சகல கட்சிகளும் குழுக்களும் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு பண்டா-செல்வா உடன்படிக்கை செய்யப்பட்டபோது ஐ. தே. க. அதனை எதிர்த்தது.

டட்லி - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்ட போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது; இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு கட்சிகளுமே முயலவில்லை. இந்த நிலையை மாற்றி இனப் பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வர அரசியல் லாபம் கருதாது பாடுபட வேண்டும் என்றும் தேவராஜ் கேட்டுக்கொண்டார்.

சினை இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகளின் ஒன்றிணைந்த நடவடிக்கையின் மூலமே தீர்க்கப்படவேண்டும் என்பதே இந்திய அரசியல், ராஜதந்திர மட்டங்களில் நிலவும் அபிப்பிராயமாகும். மீண்டும் ஒரு தடவை இலங்கையின் அரசியற் பிரச்சினையில் தலையிட இந்தியா ஆர்வம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பெருந்தோட்டங்கள் இந்தியக் கம்பனிகளிடம்

(கொழும்பு)

**- லக்ஸ்மன் கிரியெல்ல**

இந்தியக் கம்பனிகள் இலங்கையின் பெருந்தோட்டங்களைக் கையேற்கப் போகின்றன. அப்போது தொண்டமான், செல்லச்சாமி, பாஸ்கரலிங்கம் ஆகியோர் தோட்டங்களில் முதலாளியாகிவிடுவார்கள் என கண்டிமாவட்ட சு. க. எம். பி. லக்ஸ்மன் கிரியெல்ல சிறிலங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொண்டமான் தொழிற் சங்கவாதியாக இருந்த காலம் மாறிவிட்டது அவர் இப்போது முதலாளியாகப் போகிறார். இந்திய முருகப்பா கம்பனி இங்கு தோட்ட நிர்வாகங்களைப் பொறுப்பேற்கும் போது இந்த நிலைமை ஏற்படப் போகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இ. தொ. காவுக்கு இந்தியத் தமிழர்களின் நலன் குறித்துப் பேசமுடியுமென்றால் ஏன் எமக்கு சிங்கள மக்களின் நலன் குறித்து பேசமுடியாது? நாங்கள் சிங்கள மக்கள் நன்மை குறித்துப் பேசினால் அதை இனவாதமென்று அரசு தரப்பினர் கூறுவது முறையல்ல எனவும் அவர் கூறினார்.

## நினைவு கூருகின்றோம்

**1992-02-24**

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் குருநகரில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி

1986ஆம் ஆண்டு தலவாக்கொல்லை சென். கூம்ஸ் தோட்டத் தொழிலாளர்கள் மீது சிறிலங்கா காவற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 1/2 வயதுக் குழந்தை

1989ஆம் ஆண்டு வவுனியாவில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 - இளைஞர்கள்

கிளிநொச்சி கணேசபுரத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 - பொதுமக்கள்

1991ஆம் ஆண்டு மகிழடித்தீவில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

நிக்சன் மாஸ்ரர் [மகிழவெட்டுவான், மட்டக்களப்பு]

நேசன் [ஆரையம்பதி மட்டக்களப்பு]

கண்ணதாசன் [மகிழடித்தீவு, மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3954)

## சிந்தனைக்கு

தான் விதைப்பதற்கு இணங்கவே மனிதன் அறுவடையும் செய்வான்.

- விவிலியம்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 24-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# நம்பிக்கைகள் தகர்ந்து விட்டன

“வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த இரண்டு மாதங்களாக இடம் பெற்றிருக்கும் சம்பவங்களை நோக்கும் போது அரசின் நடவடிக்கை சாதகமான பெறுபேறுகளை அடைய முடியுமா என்பது சந்தேகமே” இவ்வாறு அநுராதபுர் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கே. பி. ரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வருட இறுதியில் குறிப்பாக ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சிறிலங்கா இராணுவத்தரப்பும் அரசாங்கத்தரப்பும் விடுத்த பத்திரிகை அறிக்கைகளும் அவற்றிற்கு உரமூட்டுவது போன்று கொழும்பில் இருந்து வெளிவரும் பேரினவாதப் பத்திரிகைகளின் உண்மைக்குப் புறம்பான செய்திகளும் வடக்கு, கிழக்கின் உண்மை நிலைவரத்தை ஒருவரும் புரிந்து கொள்ள முடியாத நிலைமையையே உருவாக்கியிருக்கின்றன.

கிழக்கில் புலிகளை ஒழித்து விட்டோம். வடக்கிலும் யாழ் நகருக்கு 1.5 கிலோ மீற்றர் தூரத்திலேயே நிற்கின்றோம் எந்தவேளையிலும் யாழ் நகரை நாம் கைப்பற்றி விடலம் என்றார் முப்படைகளின் கூட்டு நடவடிக்கை தலைமைத் தள கர்த்தா ஹமில்டன் வன சிங்கா. மேலும் அவர் சுமார் 1 500 புலிகளே குடாநாட்டில் உள்ளனர். அதிலும் 800 பேர் மட்டுமே தீவிர புலிகள் இயக்கப் போராளிகள் எனவும் தெரிவித்தார். அவர்களும் நகர முடியாமல் குடாநாட்டிற்குள் சிக்கிப் போயுள்ளனர் என்கின்றார்.

அரசியல்வாதிகளோ அதற்கு மேல் போனால், இன்னும் ஓரிரு மாதங்களில் வடக்கு, கிழக்கு முழுவதிலும் சிவில நிர்வாகம் ஏற்படுத்தப்படும் என்கின்றனர்.

பேரினவாதப் பத்திரிகைகளோ தமது பங்கிற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டை எவ்வாறு கைப்பற்றுவது, குடாநாட்டிற்குள் புலிகளை எவ்வாறு ஒழிப்பது என ஆலோசனை வெளியிட்டன. ‘ஐலண்ட்’ பத்திரிகையோ தனது கருத்துப் படத்தில், ஒற்றைக்கால் இல்லாத ஒரு புலியை நிரந்தரமாகக் கீறத் தொடங்கியது.

இந்நிலையில், சுதந்திரக்கட்சி எம். பி. ரட்நாயவிற்கும் ஒரு சபலம் உருவாகியிருக்கலாம். புலிகளை இன்னும் ஓரிரு மாதத்திற்குள் அழித்து விடலாம் என்பதோடு, தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தையும் அழித்து விடலாம் என்று ஆனால், இவ்வாறானதொரு எண்ணம் சுதந்திரக் கட்சி எம். பி. ரட்நாயக்காவிற்கு மட்டுமல்ல, தென்னிலங்கையில் உள்ள சிங்கள புத்திஜீவிகள் உட்பட பேரினவாத சக்திகள் சிலருக்கும் ஏற்பட்டு இருந்தது.

ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக வடக்கி

# சிங்கள அரசியல் கட்சிகளும் தமிழர் தேசிய பிரச்சினையும்

இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும்’ சுதந்திரக் கட்சியும் அவற்றின் நடைமுறையை மாற்றி எதிர்கால சந்ததியின் நன்மை கருதி இனப்பிரச்சனைக்கு தீர்வு காண சகல முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும் என்று அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அநுராதபுர மாவட்ட சுதந்திரக் கட்சிப் பிரதிநிதி கே பி. ரட்ணாயக்க குறிப்பிட்டார்.

இந்த வகையிலான சிந்தனைப் போக்குகள் தென்னிலங்கைப் பகுதிகளில் அண்மையில் பலவீனமான குரலில் கேட்கத்தொடங்கியிருக்கிறது. எனினும் பௌத்த மகபீடத்தினர் கிளப்பி வரும் இனவாதப் புயலும், அரசியல்வாதிகளின் சந்தர்ப்ப வாதப் பேச்சுகளும், அதிகாரிகளின் அசிரத்தையான அசமந்தப் போக்குகளும் தமிழ் மக்கள் இந்தப் பலவீனமான குரலில் நம்பிக்கை கொள்வதைத் தடை செய்து வருகின்றன.

தென்னிலங்கையில் அரசியல் கட்சிகளில் விரிசல்கள் ஏற்பட்டு வருவதும், புதிய அரசியல் சூழ்நிலைகள் ஏற்பட்டுவருவதும் பற்றி இங்கு நாம் அவதானிப்பது பொருத்தமுடையதே. சிறிலங்காவின் அரசியல் அமைப்பு மாற்றம் பெற வேண்டியதொன்று என்பதும், இன்றைய ஆட்சிமுறை மாற்றப்பட வேண்டியது என்பதும் இதன் மூலம் துல்லியமாகிறது.

### ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு

கடந்த வருடத்தில் பிரேமதாசாவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணையைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சிலர் வெளியேற்றப்பட்டது பழைய செய்தியே. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயருடன் செயற்பட முனைந்துள்ள லலித் காமினி குழுவினர், ஜனாதிபதி ஆட்சி முறையை தனிமனித சர்வாதிகாரப் போக்கிற்கு வித்திட்டுள்ளதாக குற்றம் சாட்டி வருகின்றனர். பாராளுமன்ற ஜனநாயக அமைப்பை மீண்டும் கொண்டு வருவதே தமது நோக்கம் என்று முழங்குகின்றனர். அதாவது சிறிலங்காவில் அரசியலமைப்பு ரீதியான மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றனர். எனினும் தேசிய பிரச்சினையாக விளங்கும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு திட்டவட்டமான யோசனைகளைக் கொண்டிருப்பதாக இவர்கள் காட்டிக் கொள்ளவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் முப்பது ஆண்டு காலப் பாராளுமன்ற ஆட்சி முறையானாலும் சரி, பதின் நான்கு ஆண்டுகளாக நீடிக்கும் ஜனாதிபதி ஆட்சி முறையானாலும் சரி, எந்த நன்மையையும் அளித்து விடவில்லை. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்பு இன்று வீராவேசமாக மேடைகளில் முழங்கும் இதே சக்திகள் இனவெறி கொண்டு தமிழ் மக்களை வேட்டையாடியதும் மறந்து விடக்கூடிய விடயமல்ல. ஆனால் தமிழ் மக்களால் எப்போதோ நிராகரிக்கப்பட்டு விட்ட சிறிலங்காவின் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும் என்று இவர்கள் குரல் கொடுக்க ஆரம்பித்திருப்பது தமிழ் மக்களின் நியாயமான குரலுக்கு வலுச் சேர்ப்பதாக அமையலாம்.

### சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் விரிசல்கள்

இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது வாரிசுச் சண்டையில் சிக்கித் தவிக்கின்றது. சிறிமாவோவிற்குப் பின்னால் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது யார் என்பதை மையமிட்டு அநுராவும், சந்திரிகாவும் கோஷ்டி சேர்ப்பதே இக் கட்சியின் தற்போதைய இழுபறியாக இருக்கின்றது. மகளோடும் சரி, மகனோடும் சரி முழுமையாக ஒத்துப் போக முடியாமல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அடிக்கடி வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொள்ளவும், கட்டாய ஓய்வு பெற்றுக்கொள்ளவும் வேண்டிய நிலை தோன்றி வருவது வெளிப்படையானது.

பாராளுமன்ற ஆட்சிமுறை மீளக் கொண்டு வரப் படல் வேண்டும் எனவும், ஜனநாயக அரசியல் செயற்பாடுகளுக்கு சுதந்திரம் இருக்கவேண்டும் எனவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுவாகக் கூறிக் கொண்டாலும், அரசுகடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது, இந்தியாவுடனான உறவு மற்றும் வெளிவிவகாரம், அனைத்துக்கும் மேலாக தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைத் தீர்வு போன்ற பல அடிப்படை விடயங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கிடையே ஒத்த கருத்துக்கள் இல்லை என்பது வெளிப்படையானது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் .மங்கள முனசிங்க தலைவராக இருக்கும் அதே சமயம், சிங்கள இனவெறியைத் தூண்டும் பிரச்சாரங்களை மேற்கொள்ளும் ‘ஹெல உறுமய’’ வினரும் சுதந்திரக்கட்சிக்குள்ளேயே இருக்கின்றார்கள். இதில்எந்த நிலையைக் கட்சி ஆதரிக்கின்றது என்ற கேள்வியை எழுப்பிப் பார்த்தால் எவரையும் கட்டுப்படுத்தும் ஆற்றலை சுதந்திரக்கட்சியின் தலைமை இழந்து போயுள்ளது என்பதே விடையாகக் கிடைக்கக்கூடும்.

### சிறிலங்கா மக்கள்கட்சி

சினிமா நடிகரும், சந்திரிகா குமாரணதுங்கவின் கணவருமான விஜயகுமாரணதுங்கவினால் கோலாகலமான ஆர்ப்பாட்டங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா மககள் கட்சியும், அவரது மறைவுக்குப் பின் தற்போது சின்னாபின்னமான நிலையை அடைந்துள்ளது. விஜயவின் மரணத்திற்குப் பின் சிறிலங்கா எக்ஷத் பக்ஷய என்ற கட்சியை ஆரம்பித்த அவரது மனைவி சந்திரிகா தற்போது மீண்டும் தாய் வீடு வந்துள்ளார். ஆனால் விஜயவின் பேரால் அரசியல் நடத்தும் சிறிலங்காமக்கள்கட்சியின் செயலாளர் வை பி.டி. சில்வாவுக்கும் தலைவர் ஒஸி அபயகுணசேகராவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் பொலிசார்தலையிட்டு தீர்க்க வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளன.

**இனியவன்**

### 1989- ன் பொதுத் தேர்தல் அனுபவம்

இவ்வாறாக கட்சிகள் பிளவுண்டுபோயிருக்கும் நிலையில் 1989ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல்மூலம்கிடைக்கக்கூடிய படிப்பினைகள்எதிர்காலத்தில் கூட்டு முன்னணி அமைக்கும் வாய்ப்பினை பெரிதும் பாதிக்கும் எனலாம். தென்னிலங்கைப் பகுதிகளில் நவசமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, மக்கள் கட்சி என்பவற்றிற்கு இடையே ஏற்பட்ட ஐக்கிய சோசலிசமுன்னணிக்கூட்டாக இருந்தாலும்சரி, ருக்மன்சேனநாயக்கா கட்சிக்கும் அஷ்ரப் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட கூட்டாக இருந்தாலும் சரி, வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரால் ஏற்பட்ட கூட்டாக இருந்தாலும் சரி எவையும் அர்த்தமுடைய தாக்கத்தை ஏற்படுத்த இல்லை. அத்துடன் குத்து வெட்டுக்களுக்கும், குழிபறிப்புக்களுக்கும் இந்த கூட்டமைப்புகளே களம் அமைத்துக் கொடுத்து விட்டமையால் பாராளுமன்றப் பதவிகளில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவே நீண்டகாலம் எடுக்க வேண்டியதாயிற்று.

சிறிலங்காப் பாராளுமன்றத்திற்கும், ஜனாதிபதிபதவிக்கும் மூன்றாண்டு ஆயுள் நிறைவு பெற்றுவிட்ட நிலையில் அடுத்து இரண்டாண்டுகளுக்கு பின் வரப்போவதாக கூறப்படும் தேர்தலை மையமிட்டு அரசியல் சக்திகளுக்கு இடையே மேலும் பிளவுகளும் சர்ச்சைகளுமே ஏற்படுவதற்கானவாய்ப்புகள்உண்டு. அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் அதிசய சம்பவங்கள் நிகழாத இடத்து தென்னிலங்கைப் பகுதியில் ஒரு தேர்தல் நடைபெறுமாயின் உறுதியான அரசொன்று அமையாது போகலாம்.

## பர்மாவிலிருந்து மக்கள் வெளியேற்றம் யு.என்.எச்.சி.ஆர். அக்கறை

(டாக்கா)

பர்மாவிலிருந்து பங்களாதேசுக்கு அகதிகள் பெருமளவில் குடிபெயருவது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் பர்மா அரசுடன் பேச்சு நடத்தவுள்ளது.

ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரியொருவர் பங்களாதேச தலைநகரான டாக்காவில் செய்தியாளரிடம் பேசுகையில் [illegible] படுத்தப்பட்டிருப்பதாகவும், பங்களாதேசிலுள்ளபர்மா அகதிகளுக்கு உதவும்படி சர்வதேச சமூகத்திற்கு வேண்டுகோள் விடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் பர்மிய அகதிகளுக்கு ஒரு மில்லியன் டாலர்கள் ஒதுக்கியுள்ளது. இதே வேளை பர்மா பங்களாதேச எல்லையில் ஏற்பட்டுள்ள [illegible]

## அமெ - முன்னாள் சோவியத் அணு. நீர்மூழ்கிகள் மோதின

[வாஷிங்டன்]

அமெரிக்காவினதும், முன்னாள் சோவியத் யூனியனதும் இரு அணுசக்தி நீர்மூழ்கிகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டசம்பவம் காரணமாக இரு நாடுகளும் பிரச்சினையில் இறங்கியுள்ளன.

இந்த சம்பவம் சர்வதேசக் [illegible]

கடல் ஆழத்தில் இருந்த பெட்டன் ரோஜ் என்ற அமெரிக்க நீர் மூழ்கியும், அதற்கு மேலே தென்பட்ட காமன்வெல்த் நாடுகளின் நீர் மூழ்கியும் மோதிக்கொண்டதாக அமெரிக்கக் கடற்படை கூறியது. அதாவதுரஷ்யாவின் பன்னிரண்டு மைல் தூர கடல் எல் [illegible]

பாதுகாப்பு அமைச்சுகுறிப்பிட்டுள்ளது.

ஆனால் ரஷ்யக் கடல் எல்லைக்குள் தனது நீர்மூழ்கிஅமெரிக்க நீர் மூழ்கியினால்மோதப்பட்டதாகமொஸ்கோவில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சோவியத் கடற்படைத் தளபதிகள் [illegible]

இன்னும் ஓரிரு மாதங்களில் வடக்கு, கிழக்கு முழுவதிலும் சிவில நிர்வாகம் ஏற்படுத்தப்படும்என்கின்றனர்.

பேரினவாதப் பத்திரிகைகளோ தமது பங்கிற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டை எவ்வாறு கைப்பற்றுவது, குடாநாட்டிற்குள் புலிகளை எவ்வாறு ஒழிப்பது என ஆலோசனை வெளியிட்டன. 'ஐலண்ட்' பத்திரிகையோ தனது கருத்துப் படத்தில், ஒற்றைக்கால் இல்லாத ஒரு புலியை நிரந்தரமாகக் கிறத் தொடங்கியது.

இந்நிலையில், சுதந்திரக்கட்சி எம். பி. ரட்நாயவிற்கும் ஒரு சபலம் உருவாகியிருக்கலாம். புலிகளை இன்னும் ஓரிரு மாதத்திற்குள் அழித்து விடலாம் என்பதோடு, தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தையும் அழித்து விடலாம் என்று ஆனால், இவ்வாறானதொரு எண்ணம் சுதந்திரக் கடசி எம். பி. ரட்நாயக்காவிற்கு மட்டுமல்ல, தென்னிலங்கையில் உள்ள சிங்கள புத்திஜீவிகள் உட்பட பேரினவாத சக்திகள் சிலருக்கும் ஏற்பட்டு இருந்தது.

ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக வடக்கிலும் கிழக்கிலும் இருந்து செல்லும் இராணுவத்தினரின் சடலங்களின் எண்ணிக்கை நிலைமை அவ்வாறு இல்லை என்பதை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது! புலிகள் யாழ். குடாநாட்டிற்குள் முடக்கப்படவுமில்லை, அவர்கள் கிழக்கில் ஒழிக்கப்படவுமில்லை என்பதை.

''இந்நிலையில், இனிமேலும் இராணுவ நடவடிக்கையைத் தொடர்வது, சிறிலங்கா சுதந்திரக் கடசி எம். பி. ரட்நாயக்கா தெரிவிப்பது போல் நல்ல பெறுபேறுகளைத் தந்து விடப் போவதில்லை. அதை விடுத்து இராணுவத் தீர்வையே அரசு நாடுமானால், அதனால் ஏறபடும் பாதகமான பலாபலன்களை சிறிலங்கா அரசு அடைந்தே ஆகவேண்டும்.

பர்மாவிலிருந்து

## மக்கள் வெளியேற்றம் யு.என்.எச்.சி.ஆர். அக்கறை

(டாக்கா)

பர்மாவிலிருந்து பங்களாதேசுக்கு அகதிகள் பெருமளவில் குடிபெயருவது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் பர்மா அரசுடன் பேச்சு நடத்தவுள்ளது.

ஐ நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரியொருவர் பங்களாதேச தலைநகரான டாக்காவில் செய்தியாளரிடம் பேசுகையில் இது விடயம் தொடர்பாக ஐ நா. பொதுச் செயலாளர் பூட்டர்ஸ் காலிக்கு தெரியப் படுத்தப்பட்டிருப்பதாகவும், பங்களாதேசிலுள்ளபர்மா அகதிகளுக்கு உதவும்படி சர்வதேச சமூகத்திற்கு வேண்டுகோள் விடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் பர்மிய அகதிகளுக்கு ஒரு மில்லியன் டாலர்கள ஒதுக்கியுள்ளது. இதே வேளை பர்மா பங்களாதேச எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை பேச்சுவார்த்தை மூலம் தணிக்க வேண்டுமென சீனா வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அமெ - முன்னாள் சோவியத் அணு. நீர்மூழ்கிகள் மோதின

[வாஷிங்டன்]

அமெரிக்காவினதும், முன்னாள் சோவியத் யூனியனதும் இரு அணுசக்தி நீர்மூழ்கிகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டசம்பவம் காரணமாக இரு நாடுகளும் பிரச்சினையில் இறங்கியுள்ளன.

இந்த சம்பவம் சர்வதேசக் கடலில் இடம் பெற்றதாக அமெரிக்கா கூறும்அதேசமயம் ரஷ்யாவின்எல்லைக்குள்இடம் பெற்றதாக ரஷ்யா கூறுகிறது.

கடல் ஆழத்தில் இருந்த பெட்டன் ரோஜ் என்ற அமெரிக்க நீர் மூழ்கியும், அதற்கு மேலே தென்பட்ட காமன்வெல்த் நாடுகளின் நீர்மூழ்கியும் மோதிக்கொண்டதாக அமெரிக்கக் கடற்படை கூறியது. அதாவதுரஷ்யாவின் பன்னிரண்டு மைல் தூர கடல் எல்லைக்கு அப்பால் சர்வதேச கடலிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சுகுறிப்பிட்டுள்ளது.

ஆனால் ரஷ்யக் கடல் எல்லைக்குள்தனது நீர்மூழ்கிஅமெரிக்க நீர் மூழ்கியினால்மோதப்பட்டதாகமொஸ்கோவில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சோவியத் கடற்படைத் தளபதிகள்இது சம்பந்தமாக அமெரிக்காவிடம் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்திருப்பதாகவும்கூறப்படுகிறது.

## கனடாவில் அகதிகள் அதிகரிப்பு அரசு மீது கண்டனம்

(ஒட்டாவா)

கனடாவில் அகதிகள் விவகாரத்தில் அரசு கையாளும் நடைமுறைகளுக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு கையாளும் நடவடிக்கைகளால் சட்ட விரோத குடியேற்றக்காரர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது என்றும்,

இலங்கை, சீனா, எல்சல்வடோர், ஈரான், லெபனான், சோமாலியா, முன்னாள் சோவியத் யூனியன் போன்ற நாடுகளிலிருந்து அகதிகள் கனடாவுக்கு படையெடுக்க ஆரம்பித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் அகதிகள் அந்தஸ்தை தமக்குத் தருமாறு விண்ணப்பிப்பவர்கள் எண்ணிக்கை எழுபது சத வீதத்திலிருந்து அறுபத்திநான்கு சத வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது

95,000 பேர் அகதி அந்தஸ்துக்காக விண்ணப்பித்துள்ளனர். உற்றார் உறவினர்களுடன் சேர்ந்து மொத்தம் 115,000 பேராக அவர்கள் எண்ணிக்கை உயர்கிறது.

இவர்களது விண்ணப்பங்கள் சம்பந்தமான பரிசீலனை இன்னும் முடியவில்லை. பலர் அகதி அந்தஸ்துக்கு தகுதி அற்றவர்களென கைவிடப்படுகின்றனர். ஏழாயிரம் பேர் மீது கைது வாராண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் உள்ளூர்ப் பத்திரிகைகளில் இருந்து அறிய முடிகிறது.

## நேபாளத்தில் புதியகட்சி

நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவின் உறவு முறைச் சகோதரர் ஒருவர் புதிய அரசியல் கட்சியொன்றை அமைத்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இமாலயராஜ்யத்தின்எதிர்க்கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றே இருப்பதால் ஜனநாயக எதிர்க்கட்சி ஒன்று அவசியம் தேவையெனக் கூறியே புதிய கட்சி இவரால் அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்சியின் பெயர் ராஷ்திரிய ஜனதா பரிவுத் தேசிய மக்கள் சபை என்றும், இக் கட்சியின் தலைவராக மட்ரிகா பிரசாத் கொய்ராலாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹோட்டல்களில் சிறுவர்கள் நுழைவதைத் தடுக்க சட்டம்

(கொழும்பு)

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின்றித் தனியாக உல்லாசப் பயணிகள் ஹொட்டலுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலத்தை விரைவில் சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ளது. வயது குறைந்தவர்கள் பாலியல் குற்றங்களுக்கு உள்ளாக்கப்படுவதைத்தடுக்கவே இந்த நடவடிக்கை.

சிறுவர் தொடர்பான சட்டங்களில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆராய ஏழுபேர் கொண்ட ஆணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சிறுவர் தொடர்பான சட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

கொழும்பு முதல் தங்காலை வரையுள்ள கரையோரப் பகுதியில் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் பலர் போதை வஸ்து மற்றும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது, சுமார் 8,000 சிறுவர்கள் கொழும்புப் பகுதியில் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள் என்று சிறுவர் பராமரிப்பு அதிகாரி கே. பி. என். சமக்கே தெரிவித்துள்ளார்.

## மத பீடங்களில் ஊடுருவ ஜே.வி.பி மீண்டும் முயற்சி -ஹட்சன் சமரசிங்க

சில மத நிறுவனங்களின் ஊடாகச் செயற்படுவதற்கு ஜே.வி.பியினர் மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கொழும்பு மாவட்ட எம். பி. ஹட்சன் சமரசிங்க கூறினார். பாராளுமன்றத்தில்அவசர காலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்' முன்னைய நிலை மீண்டும் தோன்றிவிடுவதற்கு இடம் உண்டு என அரசை எச்சரித்தார்.

## இஸ்ரேலுக்கான கடனுதவி அமெ. மீண்டும் நிராகரிப்பு

(வாஷிங்டன்)

இஸ்ரேலுக்கு பத்தாயிரம் டாலர்களை வழங்கும் கடன் உதவித் திட்டத்தை அமெரிக்கா மீண்டும் நிராகரித்துள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களை நிறுவும் திட்டத்தை இஸ்ரேல் கைவிட வேண்டும் என்று வாஷிங்டனிலுள்ள இஸ்ரேலியத் தூதுவரிடம் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. யூதக் குடியேற்றங்களை நிறுவும் திட்டத்தை இஸ்ரேல் கைவிட்டால் மாத்திரமே கடனுதவி அளிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ்பேர்கர் இஸ்ரேலியத் தூதுவரிடம் தெளிவுபடக் கூறியுள்ளார்.

இதேவேளை வெளிநாட்டு உதவிகளுக்கான காங்கிரஸ் செனேட்டர் பற்றிக் லியஸ் பேசுகையில்; இதுவரையில் எட்டப்பட்ட உடன்பாடுகளிலிருந்து இஸ்ரேல் பின்வாங்குமேயானால் அதற்கெதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## பயன்மிக்க ஒத்துழைப்புக்கு கசக்கிஸ்தான் உடன்பாடு

(டில்லி)

கலப்பு பொருளாதாரத் துறையில் பயன்மிக்க ஒத்துழைப்பை இரு நாடுகளுக்குமிடையில் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று இந்திய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் குறிப்பிட்டார். புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள கசக்கிஸ்தான குடியரசுத் தலைவர் நூர் சுல்தான் நசர்பையேக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது திரு வெங்கட்ராமன் மேலும் பேசுகையில் இந்தியா தனது கலப்புப் பொருளாதார அனுபவங்களை கசக்கிஸ்தானுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் சோவியத் குடியரசுகளில்கசக்கிஸ்தான் குடியரசும் ஒன்றாகும். சோவியத் சிதைவடைந்த பின்னர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட முன்னாள் சோவியத் யூனியனின் முதல் தலைவர் நசர்பையே ஆகும்.

கசக்கிஸ்தானும், இந்தியாவும் ஐந்து உடன்படிக்கைகளில் நேற்று கையெழுத்திட்டன.

ஆர்மேனியாவில்

## ஏவுகணைத் தாக்குதலுக்கு 20பேர் கொல்லப்பட்டனர்

[மாஸ்கோ]

நகர்னூ காரபாக் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஏவுகணைத் தாக்குதலில் இருபதுக்கும்அதிகமானோர்கொல்லப் பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

இந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்காக அசர்பைநானும், ஆர்மேனியாவும் தொடர்ந்து போரிட்டு வருகின்றன ஓராயிரத்திற்கும் மேற்கொண்ட மனித உயிர்களைப்பலி கொண்ட இந்தப் பகுதிக்கான நான்காண்டு கால போருக்கு முடிவுகாண இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் கடந்த வியாழனன்று பேச்சு நடத்திய பின் இடம்பெற்ற முதலாவது பெரிய சம்பவம் இதுவாகும்.

ஆர்மேனியர்கள் வாழும் நகர்னூ காரபாக் பகுதிக்குள் அசர்பைஜான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாக ஆர்மேனிய இராணுவத்தினர் கூறுகின்றனர். இந்தமோதலில் காமன்வெல்த் படையைச் சேர்ந்த இருவரும் அசர்பைசான் தீவிரவாதிகள் மூவரும் கொல்லப்பட்டதாக மாஸ்கோ வானொலி கூறியது.

## அணு சாதனங்கள் விற்க பாக் - சீனா உடன்படிக்கை

(இஸ்லாமாபாத்)

முந்நூறு மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அணு மின் நிலையங்களை அமைப்பதற்கான சாதனங்களை பாகிஸ்தானுக்கு விற்பதற்கான ஒப்பந்தங்களில் பாகிஸ்தானும், சீனாவும் கையெழுத்து இட்டுள்ளன. சீன தேசிய அணுமின்நிலையில் கார்ப்பரேசன் தலைவரும், பாகிஸ்தான் அணுசக்தி நிறுவனத் தலைவரும் இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

இந்த அணுமின் நிலையத்திற்கான சாதனங்களை வழங்குவது குறித்த முக்கிய ஒப்பந்தம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில், பீகிங்கில் கையெழுத்தாகியது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# இந்தியக் கம்பனிகளை சிங்களவர் எதிர்ப்பது ஏன்?

(கொழும்பு)

பெருந்தோட்டங்கள் முழுவதையும் பிரிட்டிஷிற்கு வழங்கினாலும் இவர்கள் (எதிர்க் கட்சிகள்) கவலைப்படப் போவதில்லை. ஆனால் இந்தியா வருவதையே எதிர்க்கின்றனர் என இ. தொ. கா. எம். பி. முத்து சிவலிங்கம் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

முதலாளி வர்க்கம் எந்த ரூபத்தில் வந்தாலும் நாம் அதனை எதிர்க்கின்றோம். ஆனால் தோட்டங்கள் இன்றைய நிலையிலிருந்து மீள வேண்டும். அதற்கென சரியான நிர்வாகம் தேவை. இதற்கே முயற்சி எடுக்கப் படுகின்றது.

இதில் இந்திய கம்பனிகளைச் சுட்டிக்காட்டி இனவாதம் பேசுவது முறையல்ல, அப்படி இனவாதம் பரப்பப் படுமாயின் நாட்டில் வீண் விளைவுகள் ஏற்படுமென முத்து சிவலிங்கம் மேலும் தெரிவித்தார்.

## லிபியாவிற்கு ஒஸி ஆதரவு

(கொழும்பு)

லொக்கர் பீ விவகாரம் தொடர்பாக லிபிய அரசாங்கம் கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டிற்கு சிறிலங்கா மக்கள் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. இக் கட்சியின் தலைவரும் மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஒஸி அபயகுணசேகரா தமது ஆதரவை லிபியத் தலைவர் கடாபிக்கு நேரில் தெரிவிக்கும் பொருட்டு திரிபோலிக்கு பயணமாகியுள்ளாரென கட்சிப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

கல்கிசை, கெலவல தடுப்புமுகாமில்

# ஜே. வி. பி. - பொலிஸ் மோதல்; 5பொலிசாருடன் 50பேர்காயம்

(கொழும்பு)

கல்கிசை, கெலவல தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜே. வி. பி. யினருக்கும் சிறிலங்கா பொலிசாருக்கும் இடையே நடந்த செவ்வாயன்று மாலைஇடம்பெற்ற மோதலில் 45 தடுப்புக் கைதிகளும் ஐந்து பொலிசாரும் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகளை வேறு தடுப்பு முகாம்களுக்கு மாற்றுவதற்கு சிறிலங்கா அரசு எடுத்த முயற்சியை எதிர்த்து கைதிகள் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருந்தமை தெரிந்ததே.

இம் மோதலின் போது பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதியில் தடுப்புக்கைதிகள் மாத்தறைமாவட்டத்திலுள்ள வீரவில, பெலவத்தை, கண்டி மாவட்டத்திலுள்ள பல்லேகல முகாங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

## கார் விபத்தால் வெடிப்பொருள்கள் சிக்கின

(சென்னை)

தேனியிலிருந்து மதுரைக்கு அருகிலுள்ள நாகர்மலை புதுக்கோட்டைக்குக் கார் மூலம் கொண்டுசெல்லப்பட்ட 990க்கும் அதிகமான ஜெலிக்னைற் குச்சுக்களும், 300 வெடிக்குச்சிகளும், டெற்றனேற்றர்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த வெடி மருந்துகளுடன் இருவர் பிரயாணம் செய்த அந்தக்கார் விபத்துக்குள்ளாகியதால் இவற்றைக் கண்டுபிடிக்க முடிந்ததாகப் பொலிஸ் தெரிவித்தது.

விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கும் இந்த இரண்டு பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

## பஞ்சாப் பாடசாலைகளை அரசு மூடியுள்ளது

பியாம்சிங் பஞ்சாபின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இதேவேளை அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் மூடும்படி பஞ்சாப் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. பொறியியல் கல்லூரிகள் மட்டும் வழமைபோல் நடக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மார்ச் மூன்றாம் திகதி வரை பொறியியல் கல்லூரி தவிர்ந்த ஏனைய கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் கடமைகளுக்காக பஞ்சாப் வந்த 5 லட்சம் பொலிசாரும், துருப்புகளும் கல்வி நிறுவனங்களில் இன்னும் சிறிது காலம் தங்கியிருக்க வேண்டிய நிலை நீடித்திருப்பதாலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது

## குப்பி விளக்கில் படித்தே சாதனை புரிந்தேன்

### பிரேமாவிடம் முல்லை மாணவன்

(கொழும்பு)

மின்சாரமும் இல்லை; மண்ணெய்யும் இல்லை. குப்பி விளக்கில் கல்வி பயின்றே இந்தச் சாதனையை எட்டினேன் என முல்லைத்தீவு மாவட்ட மாணவன் ஒருவர் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தெரிவித்தார்.

இலங்கையில் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாக சிறிலங்கா ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட மாணவன் தனது கஷ்ட நிலையை எடுத்து விளக்கினான். இவரது உரை அங்கிருந்த அனைவரினதும் நெஞ்சை உருக்கியதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயர் நீதிமன்றம் தீர்ப்பு

## குஞ்சிதபாதத்திற்கு பதவியுயர்வுவழங்கஉத்தரவு

(கொழும்பு)

உதவி சுங்க அத்தியட்சகரான வெள்ளவத்தையைச் சேர்ந்த எஸ். குஞ்சிதபாதத்திற்கு சுங்க அத்தியட்சகராகப் பதவி உயர்வு வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பதவி உயர்வு தமக்கு வழங்கப்படாததை ஆட்சேபித்து குஞ்சிதபாதம் அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தாக்யுல் என்று இடைக்கால தடைகத்தரவு பெற்றிருந்தார்.

அவர் தனது மனுவில் சுங்கப் பதிப்பாளர் நாயகம் எஸ். ஏ. ஹிங்கம, நிதி அமைச்சின செயலாளர் எஸ் பாஸ்கரலிங்கம், சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருந்தார்.

குஞ்சிதபாதத்தின் மனுவை விசாரித்த மூன்று நீதியரசர்கள் தமது தீர்ப்பில்,

ஏனைய அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்ட அதே திகதியில் இருந்து மனுதாரருக்கும் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என்றும்,

சிரேஷ்ட அதிகாரி என்ற முறையில் 42 ஆம் இடத்திலிருக்கும் முனசிங்காவுக்கும் அடுத்தபடியாக 43 ஆம் இடத்திலுள்ள எஸ் கே. சிவகுமாருக்கும், மற்றதாக மனுதாரர் குஞ்சிதபாதம் இடம் வகிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

செலவு தொகை வழங்கப் படவில்லை.

## சைக்கிள் யாத்திரை

(வவுனியா)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைதி, சமாதானம் நிலவுவதற்கு தெய்வ ஆசி வேண்டி இரண்டு சிங்கள மாணவர்கள் வவுனியாவிலிருந்து சிவனொளி பாதமலை நோக்கி சைக்கிள் யாத்திரை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா மருக்கந்தை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த டி. சி. ஜயவின்ச(17) ஆர் எம். சுசந்த பிரேம்லால் ஆகிய இரு சிங்கள மாணவர்களே இப்பயணத்தை மேற்கொண்டுள்ளளவர்கள் ஆவர்.

## நேட்டோ தலைமையகத்தில் உக்ரைன் அதிகாரிகள்

'நேட்டோ' இராணுவ கூட்டமைப்புக்கும் முன்னாள் சோவியத் குடியரசுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு ஏற்படவேண்டும் என நேட்டோ அமைப்பின்செயலாளர் ஒணர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரஸ்செல்சிலுள்ள நேட்டோ தலைமையலுவலகத்தில் உக்ரெயின் அதிகாரிகளை வரவேற்றுப் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உக்ரெயினின் இறைமைக்கு நேட்டோ கூட்டமைப்பு மதிப்பளிக்கிறது எனவும் சுதந்திரமான நாடுகளின் அணியில் அது சேர்ந்துகொண்டதை வரவேற்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திரு. ஒணர் நேற்று மொஸ்கோ பயணமானார். நாளை அவர் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினை சந்திக்க இருக்கிறார். முன்னாள் சோவியத் குடியரசுகளுக்கிடையியே இராணுவத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ரஷ்யாவுக்கும் உக்ரெயினுக்கும் இடையே எழுந்துள்ள சர்ச்சை குறித்து இந்தச் சந்திப்பின் போது ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக கிண்ண கிரிக்கெட் போட்டி

## மேற். இந்திய, இலங்கை அணிகள் வெற்றி

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியா, மெல்பேர்னில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 5 ஆவது உலககிண்ண கிரிக்கட் தொடரில் நேற்று மேற்கிந்திய அணி பாகிஸ்தான் அணியை எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 50 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்திய அணி 47 ஓவர்களில் விக்கெட் இழப்பு எதுவுமின்றி 221 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, நியூ பிளிமத்தில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் இலங்கை அணி சிம்பாவே அணியை வென்றது சிம்பாவே அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 312 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை அணி 50 ஆவது ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

## றேகனுடன் உடன்பாடில்லை

போலந்தின் சாலிடாரிட்டி தொழிற்சங்கத்தைக் காப்பாற்றுவதிலும், சோவியத் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு ஐரோப்பாவைச் சீர் குலைப்பதற்கும், முன்னாள் அமெரிக்க அதிபர் றேகனுக்கும் தமக்கும் இடையில் 1982 ஆம் ஆண்டில் இரகசிய உடன்பாடு எட்டப்பட்டதாக வெளிவந்த செய்தியை பாப்பரசர் ஜான் போல் நிராகரித்துள்ளார்.

மேற்கு ஆபிரிக்காவிலுள்ள மூன்று நாடுகளுக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருக்கும் பாப்பரசர் விமானத்தில் செய்தியாளரிடையே பேசும்போது திருச்சபை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்ததில் தவறில்லை. அதில் குற்றம் சாட்டுவதற்கும் எதுவுமில்லை எனவும் தெரிவித்தார்.

## சிறி. மக்கள் கட்சியிலிருந்து செயலாளர் நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா மக்கள் ... பெற்ற மத்திய கமிட்டி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடி...

# மட்டக்களப்பில் 3 வாரத்தில் 26 பேர் படையால் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த மூன்று வார காலத்திற்குள் ... நெல் வயல்களுக்கு காவல் இருக்கச் சென்றவர்களே இவ்வாறு கடத்தப்பட்டனர் என் ... தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எக்கல ...

## போதைபொருள் கடத்தலில்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியா, மெல்போர்னில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 5 ஆவது உலககிண்ண கிரிக்கட் தொடரில் நேற்று மேற்கிந்திய அணி பாகிஸ்தான் அணியை எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 50 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்திய அணி 47 ஓவர்களில் விக்கெட் இழப்பு எதுவுமின்றி 221 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, நியூ பிளிமத்தில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் இலங்கை அணி சிம்பாவே அணியை வென்றது. சிம்பாவே அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 312 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை அணி 50 ஆவது ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

கத்தரவு பெற்றிருந்தார்.

அவர் தனது மனுவில் சுங்கப் பதிப்பாளர் நாயகம் எஸ். ஏ. ஹிங்கம, நிதி அமைச்சின செயலாளர் எஸ் பாஸ்கரலிங்கம், சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருந்தார்.

திலுள்ள எஸ் கே. சிவகுமாருக்கும், மற்றதாக மனுதாரர் குஞ்சிதபாதம் இடம் வழிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

செலவு தொகை வழங்கப்படவில்லை.

வவுனியா மருக்கந்தை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த டி. சி. ஜயவின்ச(17) ஆர் எம். சுசந்த பிரேம்லால் ஆகிய இரு சிங்கள மாணவர்களே இப்பயணத்தை மேற்கொண்டுள்ளவர்கள் ஆவர்.

நேட்டோ கூட்டமைப்பு மதிப்பளிக்கிறது எனவும் சுதந்திரமான நாடுகளின் அணியில்

இந்தச் சந்திப்பின் போது ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறி. மக்கள் கட்சியிலிருந்து செயலாளர் நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா மக்கள் கட்சியிலிருந்து செயலாளர் வை.பி.டி.சில்வா, மற்றும் ரியூடர் தயாரத்னா ஆகியோர் வெளியேற்றப்பட்டிருப்பதாக கட்சியின் மத்திய கமிட்டி அறிவித்துள்ளது. கடந்த செவ்வாயன்று நடைபெற்ற மத்திய கமிட்டி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி தேசிய அமைப்பாளர் ஓசி அபயகுணசேகராவும், பொதுச்செயலாளர் பிரேமசிறி பெரேராவும் கூட்டாக விடுத்த அறிக்கையில் புதிய நிர்வாகிகள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் 3 வாரத்தில் 26 பேர் படையால் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த மூன்று வார காலத்திற்குள் இருபத்தி ஆறு பேர்களை சிறிலங்கா ராணுவம் கடத்திச் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20-01-92 க்கும் 13-2-92 க்கும் இடைப்பட்ட காலகட்டத்திலேயே இவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும், நெல் வயல்களுக்கு காவல் இருக்கச் சென்றவர்களே இவ்வாறு கடத்தப்பட்டனர் என்றும், இவர்களில் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எக்கல கிராமத்திற்கு இரண்டு வாகனங்களில் ஆயுதபாணிகளாக வந்தபொலிசார் பத்துபேரைக் கடத்திச்சென்றுள்ளனர் என்று அவசரகால சட்டநீடிப்பு விவாதத்தில் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கூறினார். எனினும் பிராந்தியத்திலுள்ள பொலிசாருடன் தொடர்பு கொண்டபோது தமக்கு எதுவும் தெரியாது எனக்கூறி கைவிரித்தனர் எனவும் தெரிவித்தார்.

# றேகனுடன் உடன்பாடில்லை

போலந்தின் சாலிடாரிட்டி தொழிற்சங்கத்தைக் காப்பாற்றுவதிலும், சோவியத் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு ஐரோப்பாவைச் சீர் குலைப்பதற்கும், முன்னாள் அமெரிக்க அதிபர் றேகனுக்கும் தமக்கும் இடையில் 1982 ஆம் ஆண்டில் இரகசிய உடன்பாடு எட்டப்பட்டதாக வெளிவந்த செய்தியை பாப்பரசர் ஜான் போல் நிராகரித்துள்ளார்.

மேற்கு ஆபிரிக்காவிலுள்ள மூன்று நாடுகளுக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருக்கும் பாப்பரசர் விமானத்தில் செய்தியாளரிடையே பேசும்போது திருச்சபை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்ததில் தவறில்லை. அதில் குற்றம் சாட்டுவதற்கும் எதுவுமில்லை எனவும் தெரிவித்தார்.

# போதைபொருள் கடத்தலில் இலங்கையர் ஈடுபாடு

(பொகோட்டா)

லத்தீன் அமெரிக்க நாடான கொலம்பியாவை ஹெரோய்ன் போதைவஸ்துத்தளமாக மாற்றும் நோக்குடன் சுமார் ஐம்பது இலங்கையர்களும் பாகிஸ்தானியர்களும் கொலம்பியாவிற்கு வந்துள்ளனர் என்று அந்தநாட்டு பாதுகாப்பு அமைச்சர் ரபேல் பார்டோ தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் நன்கு ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட போதைவஸ்துக் கடத்தல் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவர்களென்றும் அவர் கூறினார்.

# நடைபாதை வியாபாரம் இடம் மாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் இருந்த நடைபாதை வியாபாரிகள் வர்த்தக சங்கத்தினால் சந்தை உட்புறத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் சந்தையின் முன்பாக வீதியின் இருமருங்கிலும் நடைபாதை வியாபாரம் நடைபெற்றதால் இப்பகுதியில் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல சிரமங்கள் எழுந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து தமிழீழ காவற்றுறையினரின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு வர்த்தக சங்கத்தினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தற்போது பண்டத்தரிப்பு சந்தையின் உட்பகுதியில் இந்த நடைபாதை வியாபாரிகள் வியாபாரம் செய்ய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச)

# விண்ணப்பம் கொழும்புக்கு தேர்வுக்கு யாழ்ப்பாணம் - கல்வி அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்வியியல் டிப்புளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்த பட்டதாரி ஆசிரியர்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு நேர்முகத் தேர்வுக்குப் போகுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு வட பகுதி ஆசிரியர்கள் உட்பட கிழக்கு மாகாணம், மலையகம் தென்னிலங்கை ஆகிய இடங்களில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களும் விண்ணப்பித்திருந்தனர்.

கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க யாழ் பல்கலைக்கழகத்துக்கு நேர்முகப் பரீட்சைக்குப் போகச் சொல்லும் கல்வி அமைச்சின் முடிவை மீள்பரிசிலனை செய்யுமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இலவச வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து சங்க அங்கத்தவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச வைத்திய சேவையை சங்கப் பணிமனையில் நடத்தவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைச் சங்கப்பொதுச் செயலாளர் ச. தியானேஸ்வர சர்மா தற்பொழுது மேற்கொண்டு வருகிறார்.

# யாழ். மாவட்ட எம். பி. யின் ரூ. ஐந்து லட்சம் அபகரிப்பு

கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் தங்குமிடமான சிராவஸ்தியில் வைத்து யாழ். மாவட்ட பா. உ. ஒருவரின் காரும் 5 இலட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப் பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

தன்னைச் சந்திக்க வந்த சில இளைஞர்களே தம்மிடம் கொள்ளையடித்துச் சென்றதாக அவர் முறைப்பாட்டில் தெரிவித்தார்.

கார் பின்னர் அநாதரவான நிலையில் கொழும்பு வீதி ஒன்றில் கைவிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வட. கிழ.

யிட்டுள்ளது.

பி பி. ஸி. கொழும்பு முகவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், விடுதலைப்புலிகள் கடந்த பத்து ஆண்டுகளாக வடக்கிலும் கிழக்கிலும் ஒரு தனிநாட்டிற்கான போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் கொழும்பில் ஆட்சியிலிருக்கும் சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசு தமிழ் மக்களுக்கு கருணை எதுவும் காட்டவில்லை என்றும்,

அவுஸ்திரேலிய அரசு இனப் பிரச்சினைக்கான தீர்வில் பொதுநலவாய அமைப்பின் மத்தியஸ்தத்தை முன்வைத்தது. கனடா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளும் இருதரப்பினருக்குமிடையிலான சமரசப் பேச்சு வார்த்தையில் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்தன. சிறிலங்கா அரசு இந்த ஆலோசனைகளைத் தட்டிக் கழித்ததோடு சமரசப் பேச்சு வார்த்தைகளில் புலிகளைத்தமக்குச் சமமானவர்களாக ஏற்றுக் கொள்ளத் தயாராகவும் இல்லை. புலிகள் ஆயுதத்தைக் கீழே வைத்தால் தான் பேச்சு வார்த்தை என்ற நிபந்தனையையும் சிறிலங்கா அரசு வைத்துள்ளது:

இவ்வாறு கிறிஸ்தோபர் மொறிஸ்மேலும்தெரிவித்தார்

## தமிழர்களை

வதில்லை. அவர்களது இடங்களில் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் சிறிலங்கா அரசு குடியமர்த்தியுள்ளது.

இந்த நிலையில் தமிழர்களுக்கு தாம் உரிமைகளை வழங்கியுள்ளதாக வெளியுலகுக்குக்காட்டுவதற்காகஅந்தக் குடியேற்றங்களில்தமிழர்களையும் குடியமருமாறு சிறிலங்கா அரசு வற்புறுத்துகிறது.

அந்தக் குடியேற்றங்களில் 70 வீதம் சிங்களவரும் 25 சத வீதம் முஸ்லிம்களும் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதி 5 வீதத்திற்கு தமிழர்களை குடியேற்றுவதன் மூலம் தமிழர்களை அந்தஇடங்களில் சிறுபான்மையாக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டு வருகிறது.

தம்பலகாமத்திலுள்ள அகதி முகாம்களுக்கு சென்ற சிறிலங்கா இராணுவத்தினரும் உதவி அரசாங்க அதிபர்களும் அங்குள்ள ஐந்து தமிழ்க் குடும்பங்களை பாலம்போட்டாறு என்ற இடத்திற்குச் சென்று சிங்களவர், முஸ்லிம்களுடன் சேர்ந்து குடியமருமாறு வற்புறுத்தினர் அவர்கள் தமது பாதுகாப்பற்ற நிலைமையை உணர்ந்து அதற்கு இணங்காமையால்- இராணுவத்தினர் அந்தக் குடும்பங்களை சித்திரவதை செய்துள்ளனர்.

பாலம்போட்டாறு பகுதியில் இருந்த தமிழர்கள் சிங்களவரின் அராஜகம் தாங்க முடியாது இடம் பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்சூரின்

கொண்டு பேசிய அஷ்ரப் மேலும் பேசுகையில் அம்பாறை கச்சேரியில் அமைச்சர் தயாரத்தினா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மன்சூர் பேசிய விடயம் இதுவரை மறுக்கப்படவில்லை. இந்த விடயம் பத்திரிகைகளிலும் வெளியி..ப்பட்டுள்ளது. இது குறித்து ..ரசின் நிலை என்ன என்பதைப் பிரதமர் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஹேமா

''இலங்கையின் கிராமியப் பெண்களுக்கு பொருளாதார அதிகாரங்களை வழங்குதல்'' என்னும் விடயம் குறித்து திருமதி ஹேமா பிரேமதாஸா உரையாற்றுவார்.

## மாகாண

நுட்ப உத்தியோகத்தருக்கும் கிளிநொச்சியில் சேவையாற்றிய ஒரு விகிதரையும் வவுனியா வருமாறு தற்காலிக இடமாற்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## தடுத்து

11, 13(1), 13(2) பிரிவுகளின் படி தடுத்து வைக்கப்பட்டோரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பது பார்த்த மாத்திரத்திலேயேபுலனாகின்றதுஎன்றார்

பாதுகாப்பு ராஜாங்கஅமைச்சர் டி. பி. விஜயதுங்காகுற்றப் புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் கொட்பிறே குணசேகரா ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில் தமது கணவன்மாரை நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் படுத்தும்படியும், அதன் மூலம் சட்டபூர்வமாகத் தொடர்ந்து வாதாடச் சந்தர்ப்பமளிக்கும் படியும் கோரியிருந்தனர்.

இம் மனுவை விசாரித்த நீதிபதி சரத் சில்வா தீர்ப்பு எதையும் வழங்காமலேயே உயர்நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ

வத்தினர் இவர்களை விசாரித்தபோது மலர்கள் பறிப்பதற்காக வந்ததாக தெரிவித்தனராம். இதைத் தொடர்ந்து இராணுவம் அவர்களைத் தடுத்து வைத்துள்ளது.

விடுதலைப்புலிகள் இராணுவத்தின் நடவடிக்கை பற்றி தகவல் திரட்டுவதற்காக இவர்களை அனுப்பியிருக்கலாமென்று பாதுகாப்பு வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

இதோ!

மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும் பிரசித்திபெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

அழகு மிளிரும் வர்ணவேலைகளா

ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

New Era Publications

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(இ-1)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் ..க்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பப்ரவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.